
உ சிவமயம்

# குணரெத்தினமான்மியம்



புங்குடுதீவு 3ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்
சிவபிரகாசம் வீதி வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும்
கனடாவை தற்காலிக வதிவிடமாகவும்
கொண்டு அமரத்துவமடைந்த அமரர்

**கந்தையா முருகேசு**

**ஏகாம்பரம் குணரெத்தினம்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## குணரெத்தினமான்மியம்

எனும்

31ம் நாள் நினைவு வெளியீடு

29-07-2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# குணரெத்தினமாண்மியம்



புங்குடுதீவு 3ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்
சிவபிரகாசம் வீதி வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும்
கனடாவை தற்காலிக வதிவிடமாகவும்
கொண்டு அமரத்துவமடைந்த அமரர்

## கந்தையா முருகேசு
## ஏகாம்பரம் குணரெத்தினம்

அவர்களின்
திதி வெண்பா

" காலத்திரு சர்வாரி ஆண்டு வைகாசித்திங்கள்
சீலமிகு வளர்பிறை பத்தேழு நவமித்திதியில் – நற்
குணவெற்பின் கேசரியாம் குணரெத்தினம் முக்
குணத்தான் காலவெளியில் சங்கமித்தார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**எங்கள் அன்புத் தெய்வத்தின்**
**திருப்பாதங்களிற்கு**
**இந்நூல் சமர்ப்பணம்**

எம் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசி
ஆலவிருட்சம் போல் அழகு தந்து,
நிழல் தந்து, அன்பு சொரிந்து,
வாசம் குன்றா வாழ்வு தந்து,
வழி எங்கும் ஒளி தந்து, தேசம் புகழும்
நிலை தந்து, திரும்பும் இடமெல்லாம்
உங்கள் நினைவு தந்துசெம்மையாக
வாழ வழியமைத்த எங்கள் ஆருயிர் தெய்வமே!
உங்கள் நினைவுகளை எங்கள்
இதயங்களில் சுமந்த வண்ணம்
இந்நினைவுமலரினை உங்கள்
பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்
ஏற்றருள்வீர் எம்மினிய தந்தையே


**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**
**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



## பிள்ளையார் சுலோகம்

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்பு ஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயே
ஸர்வ விக்னோப சாந்தயே

## பிள்ளையார் சுலோகம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரால்
நோக்குண்டாம் மேனி நுடங்காது- பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்று கின்றேன

*****

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைத் தனிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

*****

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

*****

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

*****

ஓம் சுமுகாய நம:
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் கபிலாய நம:
ஓம் கஜகர்ணகாய நம:
ஓம் லம்போதராய நம:

ஓம் தூமகேதுவே நம:
ஓம் கணாத்ய க்ஷாய நம:
ஓம் பாலசந்திராய நம:
ஓம் வக்ரதுண்டாய நம:
ஓம் சூர்ப்பகர்ணாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் விகடாய நம: | ஓம் ஹேரம்பாய நம: |
| ஓம் விக்நராஜாய நம: | ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம: |
| ஓம் விநாயகாய நம: | ஓம் மகாகணாதிபதயே நம: |

### காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வாகா
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்

### காரிய சித்தி மாலை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்
செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்
உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை
முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை

1. பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்தமறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால்தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூறத் தொழுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

3. இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்

4. மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினானும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

5. செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான்எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிரதன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

7. மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான்எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்?
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றிமேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசெந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்டநீல மேனியும்
நான்ற வாயு நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைத் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருத்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந் தெனக் கருளிக்
கோடாயுத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையி இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்

பேறா நிறுத்ததிப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினி கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பா லாய்க்.

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தென யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய பாராயணம்

## ஞாயிற்றுக்கிழமை

*****

### தேவாரம்

தோடுடைய செவியன் விடை யேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்
தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மா னிவனன்றே

### திருவாசகம்

மெய்தானரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்தோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனே விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளேபுகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திங்கட்கிழமை

*****

### தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை
திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வாழுவாண்ணமறுமே

### திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

### திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்றுவரை
கையாரத் தொழு அருவிகண்ணாரச் சொரிந்தாலும்
செய்யயாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
யீசற்காட் செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள
வில்லதோ ரனந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுணைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாய்கிழமை

*****

### தேவாரம்

பொன்னார் மேனியனே!

புலித்தோலை அரைக்கசைத்து

மின்னார் செஞ்சடைமேல்

மிளிர்கொன்றை யணிந்தவனே!

மன்னே மாமணியே

மழப்பாடியுள் மாணிக்கமே

அன்னே உன்னையல்லா

லினிஆரை நினைக்கேனே

### திருவாசகம்

உடையா ளுன்ற னடுவிருக்கும்

அடையாள் நடுவுள் நீயிருத்தி

அடியேன் நடுவு ளிருவீரும்

இருப்ப தனால் அடியேனுன்

அடியார் நடுவுள் இருக்கும் அரு

ளைப்புரியாய் பொன்மை பலத்தெம்

முடியா முதலே என்கருத்து

முடியும் வண்ணம் முன்னின்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகனகத் திருள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி
கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி
அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந்
திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற
பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தான சற்குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசகத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன்கிழமை

*****

### தேவாரம்

மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணினல் ல.்.துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே

### திருவாசகம்

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே

### திருவிசைப்பா

முத்தீயாளர் நான் மறையர் மூ ஆயிரவர் நின்னோடு
ஒத்தே வாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தே என்று வண்டு பாடும் தென்தில்லை அம்பலத்துள்
அத்தா உன்தன் ஆடல்காண அணைவதும் என்று கொலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகுங் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

வேதநெறி தழைதோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

வசனமிக வேற்றி மறவாதே
மனதுதுய ராற்றில் உழலாதே
இசைபயில்ச படாட்ச ரமதாலே
இகபரசௌ பாக்கியம் அருள்வாயே
பசுபதிசி வாக்யம் உணர்வோனே
பழநிலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழக்கிழமை

*****

### தேவாரம்

படைக்கல மாகஉன் நாமத்

தெழுத்தஞ்சென் நாவிற்கொண்டேன்

இடைக்கல மல்லேன் எழுபிறப்பும்

உனக் காட்செய்கின்றேன்

துடைக்கினும் போகேன் தொழுது

வணங்கித் தூநீ றணிந்துன்

அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச்

சிற்றம் பலத்தரனே

### திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய்நீ

வேண்ட முழுதுந் தருவோய்நீ

வேண்டு மயன்மாற் கரியோய்நீ

வேண்டி யென்னைப் பணிகொண்டாய்

வேண்டி நீயா தருள்செய்தாய்

யானு மதுவே வேண்டினல்லால்

வேண்டும் பரிசொன் றுண்டென்னில்

அதுவு முன்றன் விருப்பன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

அற்புதத் தெய்வ மிதனின்மற் றுண்டோ
அன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்ளவைத் துள்ளமள்ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலு முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

## திருவாசகம்

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

செய்வினையுஞ் செய்வானு
மதன்பயனுஞ் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென்
றருளாலே உணர்ந்தறிந்தார்.

## திருப்புகழ்

காமியத்த முந்தி இளையாதே
காலர்கைப் டிந்து மடியாதே
ஒமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தில் ணிந்த அருள்வாயே
தூயமெய்க்க ணிந்த சுகலீலா
சூரனைக்க டிந்த கதிர்வேலா
ஏமவெற்பு யர்ந்த மயில்வீரா
ஏரகந்த மரந்த பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக்கிழமை

*****

## தேவாரம்

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திருவும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றி யொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம் வைகும்பவ யற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலு மாமே

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியு
முடலு முடைமை யெல்லாமங்
குன்றே யானையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குன்டோ
என்டோள் முக்கண் ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானே இதற்கு நாயகமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளரிளந் திங்களை முடிமேல்
கங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூ
ரறைந்தசொன் மாலையா லாழிச்
செங்கையோ டுலகி லரசுவீற் றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

நின்றாலும் மிருந்தாலுங் கிடந்தாலு நடந்தலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இடைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாத மொருகாலு மறவாமைக்
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்

## திருப்புகழ்

அதிருங் கழல்பணிந்து னடியேனுள்
அபயம் புகுவதென்று நிலைகாண
இதயந் தனிலிருந்து க்ருபையாகி
இடச்சங் கைகள் கலங்க அருள்வாயே
எதிரங் கொருவரின்றி நடமாடும்
இறைவன் தனதுபங்கி லுமைபாலா
பதியெங் கிலுமிருந்து விளையாடிப்
பலகுன் றிலுமமர்ந்த பெருமாளே

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனிக்கிழமை

*****

### தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

### திருவாசகம்

அம்மையே யப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடிததேன்
எங்கெழுந் தருளுவ தினியே

### திருவிசைப்பா

பத்தியா யுணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்கா ளிவர்தந்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமா யதற்கோர்
வித்துமா யாரூ ராதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தா ரமரர்
குழாத்தி லணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முக
னங்கி யிரவியும் இந்திரனும்
தேரர் வீதியில் தேவர்
குழாங்கள் திசைஅனைத் தும்நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளடு மோங்கிட
மின்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி உலகெலாம்

## திருப்புகழ்

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ள வரு சோலைக் குயிலாலே
மெய்யுருகுமானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவானே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழுஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடி பரவ
மங்குல் மதிதவழ் மாட வீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கயல்லர்புனற் செல்வமல்கும்
சீர்கொள்செங்காட்டாங் குடி யதனில்
கங்குல்விளங்கெளியேந்தி யாடும்
கணபதியீச்சரம் காமுறவே.

குனித்த புரவமும் கொவ்வைச் செவ்வாயும்
குமின் சிரிப்பும்
பனித்த சடையும் பவளபோல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே
இம் மானிலத்தே.

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைபார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண் பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியிலும் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை அமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல் வோனை
பத்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

பால் நினைந்து ஊட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

அம்மையே அப்பா உப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினை சுருக்கும்
புழுத்தலைப் புலையன்றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்தானந்த கனியே
அம்பலம் ஆடரங்காக்
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொட்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கன் செற்றவெஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே.

வைத்த பாதங்கள் மாலவன்
காணிகிலன் மலரவன் முடி தேடி
எய்த்து வந்திழிந்து இன்னமும்
துதிக்கின்றார் எழில்மறை அவற்றாலே
செய்தலைக் கமலம் மலர்தோங்கிய
தில்லையம்பலத்தானைப்
பத்தியாற் சென்று கண்டிட
என் மனம் பதை பதைக்ப் பொழியாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரோர் தொல் புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம் பெருகி
விழாவொலி விண்ணளவுஞ் சென்ற
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடையாற்கு வழிவழி
யாளாய் மணம் செய்குடிப்பிறந்த
பழ அடியாரொங்கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்ற ஆர் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமணவானுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறிவும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணம்

ஞானத்தின் திருவுருவை நான் மறையின் தனித்துணையை
வானத்தின் மிசை அன்றி மண்ணில்வளர் மதிக் கொழுந்தையை
தேன் நக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானகத்தின் எழுபிறப்பைக் கண்களிப்ப கண்டார்கள்.

வேத நாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மனு சமயங்கண்மானப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றியான செய்
பாதகம் அனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க ! நாதன்தாள் வாழ்க !
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க !
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க !
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க !

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பிறக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க !

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி !
தேசன் அடி போற்றி சிவன்சேவடி போற்றி !
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி !
மாய பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி !
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி !

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தை வினைமுழுதும் மோய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவாராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் ...... தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்ற
பிறந்த பிறப்பிறக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறத்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இல்லாத சிறியேர்க்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
*நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்*

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்மெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப்பதிகம்

மந்திரம மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே

வேதத்தி லள்ளத நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே

காண வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கொடுப்பத நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே

அருந்தம தாவது நீறு வவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூழத் தால வாயான் றிருநீறே

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே

மாலென டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடாக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலிங்காஷ்டகம்

பிரம்ம முராரியர் போற்றிடும் லிங்கம்
சிறிதும் கலக்கம் இல்லா லிங்கம்
பிறவின் துயரை போக்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

தேவரும் முனிவரும் போற்றிடும் லிங்கம்
காமனை எரித்த கருணா லிங்கம்
ராவணன் உள்ளம் விளங்கிடம் லிங்கம்
நானும் வணங்கும் சதாவிவ லிங்கம்

வாசமனைத்தையும் பூசிய லிங்கம்
வளர் அறிவாகிய காரண லிங்கம்
சித்த சுராசுரர் போற்றிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

பொன்மணி சூடி சுடர்ந்திடும் லிங்கம்
தன்னிடை நாகம் அணிந்திடும் லிங்கம்
தஷ்சனின் யாகம் வீழ்த்திய லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

குங்கும சந்தனம் பூசிய லிங்கம்
பங்கஜ மாலையை சூடிய லிங்கம்
தொங்கிய வினைகளை போக்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்
தேவர் கணங்களின் அர்சதை லிங்கம்
தேடிடும் பக்தியில் ஊற்றிடும் லிங்கம்
சூரியன் போல சுடர்விடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு கணங்களின் அர்சதை லிங்கம்
எல்லாமாகிய காரண லிங்கம்
எட்டு தரித்திரம் நீக்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

தேவரின் உருவில் பூஜைக்கு லிங்கம்
தேவ வண மலரை ஏற்றிடும் லிங்கம்
பரமனை அதனாய் பரவிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

லிங்காஸ்டக மிதை தினமும்
சிவன்சன்னதியில் சொல்பவர்க்கு
சிவலோக பதவியும்
சிவன் அருளும் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய
## திருக்கேதாரத் தேவாரப் பதிகம்

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிடமென்பரால்
வண்டு பாட மயிலால மான்கன்று துள்ளிவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே

பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் பதினெட்டொடாறும் விரிந்தார்க்கிடம்
தாது விண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம் பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே

முந்திவந்து புரோதாய மூழ்கி முனிகள் பலர்
எந்தை பெம்மா னென நின்றிறைஞ்சும் மிடமென்பரால்
மந்திபாயச் சரேலச் சொரிந்தும்முரிந்துக்கபூக்
கெந்தநாறக்கிளருஞ் சடையெந்தை கேதாரமே

உள்ளமிக்கார் குதிரைம் முகத்கார் ஒருகாலர்கள்
எள்கலில்லா இமையோர்கள் சேரும் மிடமென்பரால்
பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ கேட்டுப் பிரியாது போய்க்
கிள்ளையேனற் கதிர் கொணர்ந்து வாய்ப்பெய்யுங் கேதாரமே

ஊழியூழி யுணர்வார்கள் வேதத்தினொண் பொருள்களால்
வாழியெந்தை யெனவந்தி றைஞ்சும்மிடமென்பரால்
மேழிதாங்கி உழுவார்கள் போலல்விரை தேரிய
கேழல் பூழ்தி கிளைக்க மணிசிந்துங் கேதாரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறுபூசி நிலத்துண்டு நீர்மூழ்கி நீள்வரைதன்மேல்
தேறுசிந்தையுடையார்கள் சேறும் மிடமென்பரால்
ஏறிமாவின் கனியும் பலாவின்னிருஞ் சுளைகளும்
கீறிநாளும் முகக்கிளையொடுண்டுகளுங் கேதாரமே

மடந்தைபாகத் தடக்கிம் மறையோதி வானோர் தொழத்
தொடர்ந்த நம்மேல் வினை தீர்க்க நின்றார்க் கிடமென்பரால்
உடைந்த காற்றுக் குயர்வேங்கை பூத்துதிரக்கல் லறைகண்மேல்
கிடந்த வேங்கை சினமாமுகஞ் செய்யுங் கேதாரமே

அரவமுந்நீ ரணியிலங்கைக் கோனையரு வரைதனால்
வெருவவூன்றி விரலால் அடர்த்தார்க் கிடமென்பரால்
குரவங்கோங்கங் குளிர்பிண்டி ஞாழல்சுர புன்னைமேல்
கிரமமாக வரிவண்டு பண்செய்யுங் கேதாரமே

ஆழ்ந்துகாணார் உயர்ந்தெய்த கில்லார் அலமந்தவர்
தாழ்ந்துதந்தம் முடிசாய நின்றார்க் கிடமென்பரால்
வீழ்ந்துசெற்று நிழற்கிறங்கும் வேழத்தின் வெண்மருப்பினைக்
கீழ்ந்து சிங்கங் குருகுண்ண முத்துதிருங் கேதாரமே

கடுக்கள் தின்று சுழிமீன் கவர்வார்கள் மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பார் அவரெய்த வொண்ணா இடமென்பரால்
அடுக்க நின்றவ் வறவுரைகள் கேட்டாங் கவர் வினைகளைக்
கெடுக்க நின்ற பெருமான் உறைகின்ற கேதாரமே

வாய்ந்தசெந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏய்ந்த நீர்க்கோட்டிமையோர் உறைகின்ற கெதாரத்தை
ஆய்ந்த சொன்ன அருந்தமிழ்கள் பத்தும்மிசை வல்லவர்
வேந்தராகி உலகாண்டு வீடுகதி பெறுவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரிக்காப்பு

### விநாயகர் துதி

முன்னின்ற செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற் கா

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்

காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகாதேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக்குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லேன சீர்விரதம் நீயிருந்தாய்

பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு (வாய்)
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்திலே வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பாள்

நாடு செழிக்கவன்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்க வென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதறகு நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே

நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா

பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
எட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடன் பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே

வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்.

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கெளரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்

நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழிந்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைக் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்கச்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தில் உள்ளோரெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்

சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக்காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கி வர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோன்புக் கயிற்றின் இருபத்தொரு முடிச்சுகளுக்கும் உரிய பூஜை

ஓம் சிவாய சிவாயை நம:

ஓம் சாந்தாய சாந்தாயை நம:

ஓம் மகாதேவாய மகாதேவ்வியை நம:

ஓம் விருஷத்துவஜாய விருஷபத்துவ ஜயாயை நம:

ஓம் கௌரீசாய கௌர்யை நம:

ஓம் ருத்தியாய ருத்திராண்யை நம:

ஓம் பசுபதயே பசுபசுயாயை நம:

ஓம் பீமாய பீமாயை நம:

ஓம் திரியம்பகாயை திரியம்பகியை நம:

ஓம் நீலயோகிதாய நீலலோகியாயை நம:

ஓம் ஹராய ஹராயை நம:

ஓம் ஸ்மரகரய ஸ்மரகராயை நம:

ஓம் பிரார்க்காய பிரார்க்காயை நம:

ஓம் சம்பவே சாம்பவ்வியை நம:

ஓம் சர்வாய சார்வாண்ணியை நம:

ஓம் சதாசிவாய சதாசிவாயை நம:

ஓம் ஈஸ்வராய ஈஸ்வர்யை நம:

ஓம் உக்கிராய உக்கிராண்ணியை நம:

ஓம் ஸ்ரீ கண்டாய சுகபோலாயை நம:

ஓம் நீலகண்டாய கம்புகண்டியை நம:

ஓம் மிருத்தியஞ்ஜயாய காத்தியாயின்னியை நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்டலட்சுமி ஸ்தோத்திரம்

1. அழகின் இருப்பிடமான அம்புஜாட்சி நமஸ்காரம்
2. ஆதியந்த மற்றவளே ஆதிலட்சுமி நமஸ்காரம்
3. ஆனந்தத்தை அள்ளித்தரும் ஆனந்தவல்லி நமஸ்காரம்
4. ஆதிசங்கரர்க்கு அருள்புரிந்த கனகவல்லி நமஸ்காரம்
5. இருதய கமலத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீதேவி நமஸ்காரம்
6. இருட் கடலைப் போக்கும் அருட் கடலே நமஸ்காரம்
7. ஈனப்பிறவியைக் கடைத்தேற்ற வந்த ஞானவல்லி நமஸ்காரம்
8. உம்பர்கள் பூஜித்திடும் உத்தமியே நமஸ்காரம்
9. ஊழ்வினையால் அவதியுற்றேன், ஓடிவருவாய் நமஸ்காரம்
10. எண்திசையும் ஆட்சி செய்யும் ஏகாட்சரி நமஸ்காரம்
11. ஏழிசைக்கும் நாயகியே ராகவல்லி நமஸ்காரம்
12. ஐசுவரியத்தை அள்ளிச் சொரியும் ஐசுவரிய லட்சுமி நமஸ்காரம்
13. ஒப்பிட முடியாத நிறத்தவளே சுதாமதி நமஸ்காரம்
14. ஔடதமாய் காத்திடுவாய் அமிர்தவல்லி நமஸ்காரம்
15. கல்லாரையும் அரவணைக்கும் கஜலட்சுமி நமஸ்காரம்
16. காவலாகி ரட்சிக்கும் காஞ்சனையே நமஸ்காரம்
17. குசேலரை அனுக்கிரகித்த கிருஷ்ணப்ரியே நமஸ்காரம்
18. குபேரனின் வீட்டிலுறையும் கோமளவல்லி நமஸ்காரம்
19. ஜனகன் மகளாய் உதித்த ஜானகியே நமஸ்காரம்
20. கோலாசுரனை வதைத்த கமலவல்லி நமஸ்காரம்
21. சம்சார பயம் போக்கும் சாகம்பரி நமஸ்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. சஞ்சலத்தை தீர்த்துவைக்கும் சகலேஸ்வரி நமஸ்காரம்

23 சம்பத்தை அள்ளித் தரும் சர்வேஸ்வரி நமஸ்காரம்

24. சங்கு சக்கர கதாபாணியே சாரங்கியே நமஸ்காரம்

25. சந்திரனின் சோதரியே சாருலதையே நமஸ்காரம்

26. சாதனை செய்ய துணையிருக்கும் காந்தவல்லி நமஸ்காரம்

27. சந்தான பாக்கியம் அருளிச்செய்யும் சந்தானலக்ஷ்மி நமஸ்காரம்

28. சித்ததளர்கள் தேடி அலையும் ஸ்ரீதரியே நமஸ்காரம்

29. சீதளத்தில் வசிப்பவளே சீதாலட்சுமி நமஸ்காரம்

30. சுந்தரஸ்வரூபமான சௌந்தரவல்லி நமஸ்காரம்

31. ஸ்ரீ சூர்ண உருவில் இருக்கும் திருமகளே நமஸ்காரம்

32. செல்வங்களை வாரி வழங்கும் சௌபாக்கிய லட்சுமி நமஸ்காரம்

33. க்ஷேமமாக வாழவைக்கும் ஸ்ரீமதியே நமஸ்காரம்

34. ஸந்த்யா காலத்தில் உலாவும் சாயா லக்ஷ்மி நமஸ்காரம்

35. ஞானத்தை அள்ளி வழங்கும் ஞானவல்லி நமஸ்காரம்

36. தரித்திரத்தின் எதிரியான தனலட்சுமி நமஸ்காரம்

37. தாபங்களைத் தீர்த்து வைக்கும் தயாபரியே நமஸ்காரம்

38. தங்கத் தாமரையில் உறையும் தாமோதரி நமஸ்காரம்

39. தண்டை சலங்கை குலுங்க நடக்கும் தங்கச்சிலையே நமஸ்காரம்

40. தானியங்களை குறையாமல் மரும் தானியலட்சுமி நமஸ்காரம்

41. திருவின் உருவானளே திகம்பரியே நமஸ்காரம்

42. தீராத வினையெல்லாம் தீர்ப்பவளே நமஸ்காரம்

43. துயர் துடைக்கும் நாயகியே துரந்தரியே நமஸ்காரம்

44. தூண்டா விளக்கே சுடரே ஜோதியே நமஸ்காரம்

45. தேடித் தேடி அலைகின்றேன் தேவியே நமஸ்காரம்

46. தைரிய பலத்தை தரும் தைரிய லட்சுமி நமஸ்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. தொண்டன் என்னை ஆதரிப்பாய் தோகை மயிலே நமஸ்காரம்

48. தோத்தாத் திரி நாயகியே துணையிருப்பாய் நமஸ்காரம்

49. நவரத்தினங்களில் உறையும் நவநிதியே நமஸ்காரம்

50. நரசிம்மனின் பத்தினியான நளினவல்லி நமஸ்காரம்

51. நற்கதி அளித்திடும் நாராயணி நமஸ்காரம்

52. நலமளித்து வாழ வைக்கும் நந்தினியே நமஸ்காரம்

53. நானிலத்தோர் புகழாகப்பற்றும் நாகவட்சுமி நமஸ்காரம்

54. நித்ய மங்கள ஸ்வருபியான நித்யா தேவி நமஸ்காரம்

55. நூபரத்தில் சிந்துரம் துலங்கும் வத்சலையே நமஸ்காரம்

56. நேயமுடன் என்னை காத்திடுவாய் நமஸ்காரம்

57. நோன்பிருந்து வேண்டி நின்றேன் அலை மகளே நமஸ்காரம்

58. பரந்தாமன் பத்தினியே பாக்கிய லட்சுமி நமஸ்காரம்

59. பாற்கடலில் உதித்த பத்மாசனி நமஸ்காரம்

60. பாவங்களை அறுத்துவிடும் பஞ்சத வள்ளி நமஸ்காரம்

61. பார்க்கவரின் புதல்வியான பார்கவியே நமஸ்காரம்

62. பால்போன்ற நிறத்தவளே பத்மாவதி நமஸ்காரம்

63. பாமபவாய் அவதரித்த பாக்கியவதி நமஸ்காரம்

64. பூலோகத்தை ஆட்டிவைக்கும் பூமாதேவி நமஸ்காரம்

65. பிருகு முனிவரின் மகளாய் பிறந்த வதி நமஸ்காரம்

66. புருஷேத்தமன் மனைவியான புஷ்டிதேவி நமஸ்காரம்

67. புஷ்பமாரியால் மறைந்திருக்கும் புஷபவல்லி நமஸ்காரம்

68. புதையல் வடிவில் வருவாய் பூங்கோதையே நமஸ்காரம்

69. புண்ணியமே செய்ய வைப்பாய் பூதேஸ்வரி நமஸ்காரம்

70. பட்டாடைகளை கொட்டிக் கொடுக்கும் பத்மப்ரியே நமஸ்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. பாங்காய் நகையைபூணச் செய்யும் பத்மாட்சி நமஸ்காரம்

72. பொன்போன்ற நிறத்தவளே பூஜிதையே நமஸ்காரம்

73. போகங்களை கொட்டிக் கொடுக்கும் போகவதியே நமஸ்காரம்

74. பைந்நாகப் பாயில் அமர்ந்த வாசவியே நமஸ்காரம்

75. பௌர்ணமியில் அர்ச்சித்தேன் பயஹாரினியே நமஸ்காரம்

76. மயிலையில் வீற்றிருக்கும் மயூர வல்லியே நமஸ்காரம்

77. மதுசூதனன் மார்பில் உறையும் மகாலட்சுமியே நமஸ்காரம்

78. மஞ்சலிலே கொலுவிருக்கும் மஹாமாயே நமஸ்காரம்

79. மந்திரங்களால் துதிக்கப்படும் முகுந்த வாசனி நமஸ்காரம்

80. மந்திரமயமான மஞ்சளையே நமஸ்காரம்

81. மண்டலத்தை ஆளுகின்ற மாலினியே நமஸ்காரம்

82. மாமாயன் மனதை மகிழ்விப்பவளே நமஸ்காரம்

83. மின்னலை பழிக்கும் இடையையேய உடையவளே நமஸ்காரம்

84. மீனாட்சி சோதரனின் துணைவியே நமஸ்காரம்

85. முத்தாபரணம் பூண்ட மோகினியே நமஸ்காரம்

86. மூன்று லோகங்களையும் ஆளும் முராரிப்ரியே நமஸ்காரம்

87. மதந் கொண்ட அன்னம் போல் நடப்பவளே நமஸ்காரம்

88. மேகமேன கூந்தலே உடையவளே நமஸ்காரம்

89. மிதிலையின் ராணியே மைதிலியே நமஸ்காரம்

90. மோட்சத்தை அளிக்கும் மோகனாங்கி நமஸ்காரம்

91. நிமிவம்சதீபமான நிர்மலையே நமஸ்காரம்

92. யௌவனம் மாறாத யாமினியே நமஸ்காரம்

93. யாதவகுலத்தின் மருமகளே நமஸ்காரம்

94. ராஜசன்மானம் அருளும் ராஜலட்சுமி நமஸ்காரம்

95. யாக வேதியின் நடுவினிலே ஆவிர்ப்பித்தவளே நமஸ்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. லலித பாக்கியங்களை தரும் ராம தேவி நமஸ்காரம்

97. வற்றாத செல்வம் அளிக்கும் வரவட்சுமியே நமஸ்காரம்

98. ஜெயங்களுக்கு இருப்பிடமான ஜெய லட்சுமி நமஸ்காரம்

99. வறுமையை துவம்சம் செய்யும் வீர லட்சுமியே நமஸ்காரம்

100. வாகன போக மளிக்கும் வைஷ்ணவியே நமஸ்காரம்

101. வித்தைகளுக்கு அதிபதியான வித்தியா லட்சுமி நமஸ்காரம்

102. ஸ்வர்ணத்திற்கு ஒப்பான காந்தியை யுடைய ஸ்வர்ணலோக நமஸ்காரம்

103. விதேக வம்சத்தை அலங்கரித்த வைதேகியே நமஸ்காரம்

104. வெற்றியையே தேடித் தரும் விஜய லட்சுமி நமஸ்காரம்

105. வேதங்களின் பிறப்பிடமே வேதவல்லி நமஸ்காரம்

106. வேங்கடவன் மார்பிலுறையும் அலமேலு மங்கா நமஸ்காரம்

107. வைகுண்டத்தை அலங்கரிக்கும் வைஜெயந்தி நமஸ்காரம்

108. அஷ்டபோகம் தந்திடுவாய் அஷ்டலட்சுமி நமஸ்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போருக்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசகன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரிவேலவன்  சீக்கிரம் வருக
சரவண பவச சடுதியில் வருக
ரவண  பவச  ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரைக் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ் சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செகண செகண
மொகமொக மொகமொக மொக மொக மொகெண
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விரிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருப்பல் முனைவேல் காக்க
செப்பிய நாவை செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக்குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவன் காக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்களும்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனும் பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடி வாழ் அழகிய வேலா
செந்தில் மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நாவிருக்க யான் உனை பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலகன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கசவ மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்ற ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடி பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்த கையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினிலிருக்கம்
சின்னக் குழந்தை சேவடி போற்றி !
எனைத்தடுத் தாட்கொள என்றென துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாதிபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சரவணபவ அஷ்டோத்திரம்

**ஓம் ஸ்கந்தாய பார்வதி பரிய நந்தாயசா**
**மகாதேவ குமாரய சுப்ரமணயாய தே நமஹ**

1. ஓம் ஸ்கந்தாய நம:
2. ஓம் குஹாய நம:
3. ஓம் ஷண்முகாய நம:
4. ஓம் பாலநேத்ர சுதாய நம:
5. ஓம் பிரபவே நம:
6. ஓம் பிங்கலாய நம:
7. ஓம் கிருத்திகா நம:
8. ஓம் சிகிவாஹநாய நம:
9. ஓம் த்விஷட்புஜாய நம:
10. ஓம் த்விஷட்புஜாய நம:
11. ஓம் சக்திதராய நம:
12. ஓம் பிஷிதாஷபிரம்பஜநாய நம:
13. ஓம் தாரகாசுரசம்ஹாரிணே நம:
14. ஓம் ரச்ஷோபலவிமர்தநாய நம:
15. ஓம் மத்தாய நம:
16. ஓம் ப்ரமத்தாய நம:
17. ஓம் உன்மத்தாய நம:
18. ஓம் சுரசைன்யசுர நம:
19. ஓம் தேவசேனாதிபதயே நம:
20. ஓம் பிரக்ஜ்னாய நம:
21. ஓம் கிருபானவே நம:
22. ஓம் பகதவத்சலாய நம:
23. ஓம் உமாசுதாய நம:
24. ஓம் சக்திதராய நம:
25. ஓம் குமாரய நம:
26. ஓம் கிரௌன்சதாரணய நம:
27. ஓம் சேனான்னே நம:
28. ஓம் அக்னிஜமனே நம:
29. ஓம் விஷாகாய நம:
30. ஓம் சங்கராத்ம நம:
31. ஓம் சிவ சுவாமினே நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. ஓம் கணசுவாமினே நம:
33. ஓம் சர்வசுவாமினே நம:
34. ஓம் சனாதனாய நம:
35. ஓம் அனந்தசக்தயே நம:
36. ஓம் அக்ஷோப்யாய நம:
37. ஓம் பார்வதீபிரிநந்தாய நம:
38. ஓம் கங்காசுதாய நம:
39. ஓம் சரோத் புதாய நம:
40. ஓம் ஆஹீதாய நம:
41. ஓம் பாவகாத்மஜாய நம:
42. ஓம் ஜ்ரும்பாய நம:
43. ஓம் ப்ரஜ்ரும்பாய நம:
44. ஓம் உஜ்ரும்பாய நம:
45. ஓம் கமலாசனசம்த்துதாய நம:
46. ஓம் ஏகவர்ணாய நம:
47. ஓம் த்வி வர்யணாய நம:
48. ஓம் திரிவர்ணாய நம:
49. ஓம் சமனோஹறாய நம:
50. ஓம் சதுர் வர்ணாய நம:
51. ஓம் பஞ்ச வர்ணாய நம:
52. ஓம் பிரஜாபதயே நம:
53. ஓம் அஹஸ் பதாய நம:
54. ஓம் அக்னி கர்பாய நம:
55. ஓம் சமீகர்பாய நம:
56. ஓம் விஸ்வரேதசே நம:
57. ஓம் சுராரிக்னே நம:
58. ஓம் ஹரித்வர்ணாய நம:
59. ஓம் சுபகராய நம:
60. ஓம் வசவேநம:
61. ஓம் உக்ர வேஷ ப்ரதே நம:
62. ஓம் பூஷ்ணே நம:
63. ஓம் கபஸ்தினே நம:
64. ஓம் கஹநாய நம:
65. ஓம் சந்திரவர்ணாய நம:
66. ஓம் கலாதராய நம:
67. ஓம் மாயாதராய நம:
68. ஓம் மஹாமாயினே நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. ஓம் கைவலடயாய நம:
70. ஓம் சங்கரி சுதாய நம:
71. ஓம் விஷ்வயோநயே நம:
72. ஓம் அமேயாத்மநே நம:
73. ஓம் தேஜோநிதயே நம:
74. ஓம் அநாமயாய நம:
75. ஓம் பரமேஸ்தின நம:
76. ஓம் பரபிரம்ஸணே நம:
77. ஓம் வேதகர்பாய நம:
78. ஓம் விராட்சுதாய நம:
79. ஓம் புலிந்த கன்யா பர்த்ரே நம:
80. ஓம் மஹா சரஜ்வத விருதாய நம:
81. ஓம் ஆஸ்ரிதாகில தாத்ரே நம:
82. ஓம் சோரக்ணாய நம:
83. ஓம் ரோ கநாஸநாய நம:
84. ஓம் அனந்தாமூர்த்தயே நம:
85. ஓம் ஆனந்தாய நம:
86. ஓம் சிகண்டி க்ருத கேதனாய நம:
87. ஓம் தம்பாய நம:
88. ஓம் பரம தம்பாய நம:
89. ஓம் மஹா தம்பாய நம:
90. ஓம் விருஷாகபயே நம:
91. ஓம் காரணோ பாதேஹாய நம:
92. ஓம் காரணாதீதவிக்கிரஹாய நம:
93. ஓமம் அனீஸ்வராய நம:
94. ஓம் அம்ருதாய நம:
95. ஓம் பிராணாய நம:
96. ஓம் பிரணாயாமபராயணாய நம:
97. ஓம் விருத்தஹந்த்திரே நம:
98. ஓம் வீரக்னாய நம:
99. ஓம் ரக்த ஸ்யாமகலாய நம:
100. ஓம் மஹதே நம:
101. ஓம் ஸ்ரீ சுப்ரமணியா நம:
102. ஓம் க்ரக ப்ரீதிகராய நம:
103. ஓம் பிராமணாய நம:
104. ஓம் பிராமண ப்ரியாய நம:
105. ஓம் வம்ச விருத்தி கராய நம:
10.6 ஓம் வேத வேத்யாய நம:
107. ஓம் அக்ஷய பரப்பிரதாய நம:
108. ஓம் மயூர வாஹானயா நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலா கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசாக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலா கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகலா கலாவல்லியே.

அளிக்குஞ் செழுத்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துண் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலா கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகலா கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலா கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலுமம்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங் காலுமென்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகலா கலாவல்லியே.

பாட்டும் பெருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கரைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கம் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகலா கலாவல்லியே.

சொல்விற் பணமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைக்கொள்
வாய்தளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகலா கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராய்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலத் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ அரச
சன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகலா கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகலா கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஆஞ்சநேய போற்றி – 108

ஓம் அஞ்வனா தேவி பெற்ற அனுமனே போற்றி
ஓம் ஆஞ்ச நேயனே எங்கள் அருமையே போற்றி
ஓம் இன்னலைத் தீர்க்க வந்த இறைவனே போற்றி
ஓம் ஈடிலா வீர தீர இளமையே போற்றி
ஓம் உள்ளத வாலை உச்சி உகந்தவா போற்றி
ஓம் ஊறிலா வண்ணம் காக்கும் உத்தமா போற்றி
ஓம் எண்ணரும் கலைகள் வல்லாய் எளிமையே போற்றி
ஓம் ஏற்றமே அருளும் செல்வ மாருதி போற்றி
ஓம் ஐந்தெனும் புலனை வென்ற ஆண்டவா போற்றி
ஓம் ஒண்ணிதி வழங்க வல்ல உயர்குணமே போற்றி
ஓம் ஓங்காரம் செய்து துள்ளும் உரிமையே போற்றி
ஓம் ஔடதம் தேடிச் சேர்த்த அதிசயம் போற்றி
ஓம் கண்ணுதல் கருதும் செல்வ கண்மணி போற்றி
ஓம் காற்றிறை அருளால் வந்த கடமையே போற்றி
ஓம் கிண்கினி தண்டை கொண்ட கிளர்ச்சியே போற்றி
ஓம் கீசகன் பகையின் அண்ணன் அனுமனே போற்றி
ஓம் குரங்கினத் தலைமைகொள் துணைவா போற்றி
ஓம் கூரிய சொல்லின் செல்வ சுந்தர போற்றி
ஓம் கெடுதியை களையும் எங்கள் இறைவனே போற்றி
ஓம் கேடுகள் நீக்கும் ஆஞ்ச நேயனே போற்றி
ஓம் கைவரு ராம பக்த அனுமனே போற்றி
ஓம் கொடுமையை நீக்க வந்த குமுதமே போற்றி
ஓம் கோடி சூரியப்பிரபை கொண்ட இறைவா போற்றி
ஓம் கௌவையைக் களையும் செல்வ மாருதி போற்றி
ஓம் சங்கடம் நீக்க எண்ணும் சத்தியம் போற்றி
ஓம் சாத்திரம் எல்லாம் கற்ற சற்குண போற்றி
ஓம் சிந்தனை சிறந்த செல்வ அனுமனே போற்றி
ஓம் சீரிய ஞான தீப மாருதி போற்றி
ஓம் சுந்தர முகம் கொள் ஞான சூக்குமம் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சூரியன் மாணியான சுடரொளி போற்றி
ஓம் செந்தமிழ் கம்பன் போற்றும் கீர்த்தியே போற்றி
ஓம் சேய்மையில் அண்மையாம் துணைவரே போற்றி
ஓம் சைலமே உறையும் எங்கள் சற்குணர் போற்றி
ஓம் சொர்ணமே மேனியான சுந்தரா போற்றி
ஓம் சோகமே தீர்ப்பாய் எங்கள் அனுமனே போற்றி
ஓம் சௌகரியம் சேர்ப்பாய் எங்கள் சஞ்சீவி போற்றி
ஓம் கடாயெனும் பெயர் கொண்ட கண்மணி போற்றி
ஓம் காட்டினில் மலையில் வாழும் கற்பகம் போற்றி
ஓம் கிளிபயில் சோலை எல்லாம் திருகுவை போற்றி
ஓம் கீண்டினை அசுரர் மாளக் கீர்த்தியே போற்றி
ஓம் குறைவறு கல்வி ஞானம் படைத்தனை போற்றி
ஓம் கூறுசொல் தன்னின் செல்வன் சுந்தரன் போற்றி
ஓம் கெடுதியைச் சாய்த்து நீக்கும் அனுமனே போற்றி
ஓம் கேடறியாத தூத இறைவனே போற்றி
ஓம் கைநகம் வஜ்ர மான கண்மணி போற்றி
ஓம் கொள்கையில் உறுதி வாய்ந்த மாருதி போற்றி
ஓம் கோட்டையைத் தாண்டும் செல்வ மாருதி போற்றி
ஓம் கௌபீன் இறைவன் போற்றும் கனகமே போற்றி
ஓம் தண்ணிழல் ஆன எங்கள் புண்ணியா போற்றி
ஓம் தாங்கரும் துயரம் தீர்க்கும் தருநிழல் போற்றி
ஓம் திண்ணிய உரம்கொள் தேகா மாருதி போற்றி
ஓம் தீமையை நீக்கும் செல்வ அனுமனே போற்றி
ஓம் துணிவினில் சிறந்த எங்கள் அனுமனே போற்றி
ஓம் தூய்மை வாய்மை வாய்ந்த மெய்மையே போற்றி
ஓம் தெளிவுறு கேள்வி ஞானம் கிளர்த்துவை போற்றி
ஓம் தேடிய சஞ்சீவி நல்கும் சீர்த்தியே போற்றி
ஓம் தையலாம் சீதை போற்றும் தூதனே போற்றி
ஓம் தொழில் நலம் வலிமை நல்கும் தூயனே போற்றி
ஓம் தோள்வலி மிக்க ராம தூதனே போற்றி
ஓம் தௌமியன் போற்றும் ஞான அனுமனே போற்றி
ஓம் நற்குண சீலரே மாருதி வீர போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நாடிய தரவே வல்லாய் நாயக போற்றி
ஓம் நிச்சயம் பிரமச் சரியம் காத்தனை போற்றி
ஓம் நீடிய பகையை நீக்கும் நிறைகுணம் போற்றி
ஓம் நுண்ணம் கொள் அறிவு கொண்ட மாருதி போற்றி
ஓம் நாலறி புலவ ஞான பானுவே போற்றி
ஓம் நெற்றியில் நாமம் காட்டும் நெறியதே போற்றி
ஓம் நேர்ந்தனை ராம நாமம் தூதனே போற்றி
ஓம் நொந்திடா வண்ணம் காக்கும் நோக்கமே போற்றி
ஓம் நௌவியின் சென்ற இராம தூதரே போற்றி
ஓம் பலநலம் கொண்ட எங்கள் பரமனே போற்றி
ஓம் பாலக வஜ்ர தேகா அனுமனே போற்றி
ஓம் பிலமதில் சென்று வெற்றி சேர்த்தனை போற்றி
ஓம் பீழைகள் நீக்கும் செல்வ மாருதி போற்றி
ஓம் புன்மைகள் தன்னை நீக்கும் புனிதமே போற்றி
ஓம் பூவுடைக் கானம் வாழும் பூரண போற்றி
ஓம் பெருமைகொள் உரமே பெற்ற பரமனே போற்றி
ஓம் பேசரு வியாகரணம் திரியும் அன்பே அனைத்து நீ போற்றி
ஓம் பொறுமைகொள் அறத்தின்தூத புண்ணியா போற்றி
ஓம் போயினை வென்றாய் நன்றாய் பூரண போற்றி
ஓம் பௌவமே தாவிப் பாயும் பரமனே போற்றி
ஓம் எக்குலத் தாரும் போற்றம் இறைவனே போற்றி
ஓம் எங்கனும் நீயே உள்ளாய் இறைவனே போற்றி
ஓம் அச்சரத்தால் வாலி அழிந்திடச் செய்தாய் போற்றி
ஓம் அஞ்சனை செல்வ அரிய செம்மணியே போற்றி
ஓம் திட்டமாய்ச் செயல் செய்யும் தினகரன்தூத போற்றி
ஓம் திண்ணமாய் வெற்றி தரும் ஆஞ்சநேயனே போற்றி
ஓம் எத்திறம் தனிலும் வல்ல இனியமாருதியே போற்றி
ஓம் எம்மருங் கினிலும் வாழும் இறைவா போற்றி
ஓம் எப்பரம் பொருளும் வாழத்தும் இனியவா போற்றி
ஓம் எவ்வனம் செலினும் உய்வன சொல்வாய் போற்றி
ஓம் எய்திடும் இனிமை எல்லாம் இயற்றுவை போற்றி
ஓம் இல்லற ராம தூதன் எங்கள் மாருதியே போற்றி
ஓம் நள்ளிரா தன்னில் காக்கும் காலசஞ் சீவி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஆழ்கடல் கடந்த வஜ்ர தேகனே இறைவா போற்றி
ஓம் பாற்கடல் கிறந்த மாது பரிவுறும் கடமை போற்றி
ஓம் மார்பினைப் பிளந்து மாயன் மகத்துவம் அளித்தாய் போற்றி
ஓம் பன்னலம் சேர்க்கும் எங்கள் பத்ம தேகனே போற்றி
ஓம் பன்னலம் சேர்க்கும் எங்கள் ராம தூதனே போற்றி
ஓம் பொன்னவிர் அஞ்சனை தந்த புதுமையே போற்றி
ஓம் நூற்கடல் கடந்த எங்கள் நுண்மையே போற்றி
ஓம் நாற்பயன் விளைக்கும் எங்கள் படர்தனை போற்றி
ஓம் போற்றியே அனும போ்ற்றி புரணா போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாவிஷ்ணு துதி

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மொடும்
அவர் தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

ஊரிலேன் காணியில்லை உறவுமற்றொருவர் இல்லை
பாரில் நின் பாத மூலம் பற்றினென் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனேன் கதறுகின்றேன்
யாருளர் களைகண் அம்மா அரங்கமா நகருள்ளானே

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோவிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாலஷ்மி துதி

உலகம் புரக்கும் பெருமான்தன்

உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி

உவகையளிக்கும் பேரின்ப உருவே

எல்லாம் உடையாளே

திலகம் செறிவானுதற் கரும்பே தேனே

கனிந்த செழுங்கனியே தெவிட்டாது

அன்பர் உள்ளத்துள்ளே தித்தித்தெழுமோர்

தெள்ளமுதே

மலகம் சுகத்தேற்கு அருளளித்த வாழ்வே

என்கண்மணியே

என் வருத்தம் தவிர்க் வரும் குருவாம்வடிவே

ஞான மணிவிளக்கே

சலகம் தரும் போற்கருணை மொழி தடங்கய்

திருவே

கண்ணமங் கைத்தாயே சரணம் சரணம்

இதுதருணம் கருணை தருவாயே

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி துதி

ஆயகலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விற்கு மென்னம்மை – தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பள்
வெள்ளை அரியாசனத்து அரசரோடென்னைச்
சரியாசனம் வைத்த தாய்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந் தாமரை போல் கையும்
தடியிடையும் அல்லும் பகலும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பன் துதி

தாய் மடியைத் தேடியங்கே
தாவிவரும் கன்றுகளாய்
வாய்திறந்த பாடிவந்தோம் ஐயப்பா ! உன்
வாசலுக்கே ஓடிவந்தோம் ஐயப்பா
நீ யிருக்க உனது மக்கள்
யார் முகத்தில் போய்விழிப்போம்
சேய் முகத்தைப் பாராயோ ஐயப்பா ! உன்
திரு வருளைத் தாராயோ ஐயப்பா !

## தட்சண் மூர்த்தி துதி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யா(று)
அங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோளாறு பதிகம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறுதிங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமேபுகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல அவை நல்ல நல்ல
அபான ரவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டோ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாதுபூமி
திசை தெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்களான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள் தனோடும்
விடையேறு மெங்கள் பரமன்
விஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேதுலணிந்தென்
உளமே புகுந்து வதனால்
வெஞ்சின் அவுணரோடும் உறுமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வள்ளிவரிய தளதாடை வரிகோவணத்தார்
மடவாள்தனோடும் உடனாய்
நாண்மரல் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன் மங்கை யொருபாகமாக
விடையேறு செவ்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய் தன்று விடை மேல் இருந்து
மாடவாள்தனோடும் உடனாய்
வாள்மதிவன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்றனோடும்
இடரான் வந்த நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோ டெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசையோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் சூழலி யோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாக முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கு அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல்துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞான முனிவன்
நானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வனில்
அரசாள்வர் ஆணை நமதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

## சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## சந்திரன்

எங்கள் குறைக ளெல்லந் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபத வானே பொன்னடி போற்றி
பதந்தந் தருள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வியாழன்

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
க்ரக தோஷமின்றிக்கடாக்ஷித் தருள்வாய்

### வெள்ளி

சுக்ர மூர்த்தி சுபமிகு யீவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே

### சனீஸ்வரன்

சங்கடத் தீர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா

### இராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்ற பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரஷி

### நந்திதேவர் துதி

நந்தி எம் பெருமான் தன்னை
நாடொறும் வணங்குவோர்க்குப்
புந்தியில் ஞானம் சேரும்
பொலிவுறு செல்லம் கூடும்
சிந்தையில் அமைதி தோன்றும்
சிறப்புறு மக்கள் சேரவர்
இந்திர யோகம் கிட்டும்
இணையிலா வாழ்வுதானே

### சண்டேஸ்சரர் துதி

புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலந் தக்கனார் அகத்து நாணிய
புண்ணியம் பாதகமாகப் போற்றிய
அண்ணலந் தண்டிதன் அடிகள் போற்றுவோம்

### வைரவர் துதி

பெருகுதன் புகழுனேனோர் பிரதாப மடங்கி யாங்கி
முருகுதன் கலரின் மேலான் முண்டவெண்கபாலத்தாடு
கருகுபைங் கொண்டன் மேனி கவிழ்ந்திரு செந்நீரேற்ற
திருகுநீர் வடுகப் புத்தேன் சேவடி சென்னி சேர்ப்பாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்
சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம்
வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலக மெல்லாம்

ஓம் சரவணபவ

திருச்சிற்றம்பலம்

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குணரெத்தினமாண்மியம்

திரைகடல் சூழ் சப்தகன்னியரில்
முந்நீர் வளங்கொழி நிலவணங்காம்
புங்கைதூபத்தின் கண் பெருங்காடெனும் நற்பதியில்
காலவைரவனின் அம்சமாய் மாரியம்மன் துணையோடு
ஏகாந்த இயல்பினன் ஏகாம்பரம்,
யோகங்கள் மொட்டவிழும் நாயகியாம் யோகம்மா எனும்
பேரிணையின் சதுர் நாயகனாய் வந்துதித்தார்
குணவெற்பின் கேசரியாம் குணரெத்தினம்.

தன்வினை,செய்வினை,ஊழ்வினை ஆகியன வசப்பட்ட
ஆத்மா தன் காரணகாரியங்களை கட்டவிழ்த்து
ஆனந்தமய வெளியெங்கும் அலைந்தழிந்து பல
தொல்லைகள் கடந்து காலங்களில் கதைசொல்லி
கரைந்து கரைந்து கரைந்துபோகும்.

அன்பின் அன்னமாம் அன்னலெட்சுமியை மூத்தவளாயன்றி
தன் தாயாகவே வரிந்தார் அங்கனமே வாழ்ந்தார்.
தனயர்களாய் சீர்மிகு நடராசாவும் கருணைகூர் சண்முகநாதனும்
வலம் வர வித்தைகள் கற்று பல நற்பண்புணர்ந்தார்.
ஆசைத்தம்பியாம் தங்கராசா உடன் அன்புத்தங்கை ருக்குமணி
சூழவர அன்பின் ஊற்றாய் அணைத்து உவகைகொண்டார்.

சூனியப்புள்ளியிலிருந்து தூலமாய் சூல்கொண்ட
காலத்துகள்கள் பேரியக்கம் கொண்டு ஓயாமல்
ஓர் ஒழுங்குகொண்டு இயங்கிப்பின் தூலப்பிண்டத்திலிருந்து
காலமாய் காலியாய் சூனியமையம்கொள்ளும்.

பருவம் வந்ததும் தன் பள்ளிக்கல்வி முடித்து
தொழில் பயில தலைநகராம் கொழும்பில் உறைந்தார்.
பதின்பருவம் கடந்து இளம்பருவ இல்லறம் புகும்வாயிலாம்
இருமணம் இணையும் திருமணபந்தத்தின் துணைகொள்ள
தம்பிப்பிள்ளை பாக்கியம் இணையின் காதல்பரிசாம்
நல் நலமிகு நாயகி பரமேஸ்வரி கரம்பிடித்தார்.

> "புண்ணியம் செய்தனமே–மனமே.– புதுப் பூங் குவளைக்
> கண்ணியும் செய்ய கணவரும் கூடி, நம் காரணத்தால்
> நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடு இருக்கப்
> பண்ணி, நம் சென்னியின் மேல் பத்ம பாதம் பதித்திடவே."

– அபிராமி அந்தாதி – பாடல் 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இடங்கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து
வடங்கொண்ட கொங்கை–மலைகொண்டு இறைவர் வலிய நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலம் கொண்ட நாயகி, நல் அரவின்
வடம் கொண்ட அல்குல் பணிமொழி––வேதப் பரிபுரையே."

– அபிராமி அந்தாதி – பாடல் 42

இல்லறத்தின் பயனாய் செந்தீபன், விமலரூபன்,சஞ்ஜீபன்
துஷீபன் புதல்வர்கள் நால்வரும் அன்பின் ஏகபுதல்வியாய்
ஐந்தாவது பெண்ணாய் அனைவருக்கும் பேரன்னையாய்
சிந்துஷா எனும் தெய்வப்பெண்ணையும் பெற்றுமகிழ்ந்தார்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்."

– திருக்குறள் – குறள் 67

தன் இல்லறத்தை நல்லறமாக்க தன் இணையையும் குழந்தைகளையும் சீராகவும் பண்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கவும் பேணவும் நாம் பிறந்தமண்ணின் வர்த்தகத் திறமையைப் பறைசாற்றவும் வந்தாரை வாழவைக்கும் வன்னிப்பெருநிலப்பரப்பின் மத்தியாம் மாங்குளத்தில் "தீபன் கபே", "தனலெட்சுமி ஸ்ரோர்ஸ்", "இரத்தினம் ஸ்ரோர்ஸ்" எனும் பெயர்களில் தனது தொழில்களில் முத்திரையைப் பதித்தது மாத்திரமன்றி வயல்கள், தோட்டங்களையும் செய்தார்.

தொடர்ந்த உள்நாட்டுப்போர காரணமாக தனது தொழில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் எல்லாவற்றையும் தாண்டி தன்முயற்சியில் சற்றும் மனந்தளராது கிளிநொச்சியில் "இரத்தினம் களஞ்சியம்" எனவும் அப்படியே மாங்குளம், வவுனிக்குளம் என தனது வியாபாரத்தைத் தொடர்ந்தார். பின் எல்லாம் இழந்து வவுனியா வந்து கடையொன்றில் கூலியாளாகி பின் கொழும்பு வந்து கொட்டாஞ்சேனையில் சிறு சில்லறைக்கடையை நடாத்தி பின் யாழ் சென்று சட்டநாதர் தெருவில் ஒரு சிறு கடையை நடாத்தினார்.

தன் பிள்ளைகளுக்கு நிறைவான ஒரு கல்வியைக் கொடுக்க யாழ்நகர் வண்ணார்பண்ணையில் இல்லமொன்றை வாங்கி தன் கனவை நனவாக்கினார்.

தன் மகவுகளை இலங்கை, இந்தியா, இங்கிலாந்து பல்கலைகழகங்களுக்கு அனுப்பி உயர்கல்விகளையும் பட்டப்படிப்புகளை வழங்கினார்.

" மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்."

– திருக்குறள் – குறள் 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிள்ளைகளுக்கு சீரும் கல்வியும் வழங்கியது மட்டுமன்றி நல்ல துணைகளைத் தேர்வு செய்து திருமணம் செய்து வைத்து பேரன் பேத்திகளைப் பெற்று மகிழ்ந்திருந்தார். செந்தீபன்– கார்த்திகா ஊடாக கிரிஷ்,மகிஷ் இருவரையும், விமலரூபன் நவநந்தினி ஊடாக சவின், மேஷிகா இருவரையும், சஞ்ஜீபன் சுவிதா ஊடாக ஆரனையும் தன் பேரப்பிள்ளைகளாப் பெற்றிருந்தார்.

தனது மைத்துனர்களாக நாகேசு, லோகசுந்தரி, சகுந்தலாதேவி, சரஸ்வதி, சிங்கராசா, தனலட்சுமி, பத்மாவதி ஆகியோரையும் சகலர்களாக தெய்வேந்திரம், தர்மலிங்கம் ஆகியோரையும் சம்பந்திமார்களாக மாணிக்கவாசகர் கலாவதி, ஆனந்தநாதன் பாக்கியம், பரமநாதன் தவலட்சுமி ஆகியோரையும் பெற்று சிறப்புற்றிருந்தார்.

தன் இறுதிகாலப்பகுதியில் தென்னிந்தியா இராமேஸ்வரம் முதல் வட இந்தியா காசி கங்கைக்கரை வரை தலயாத்திரையை நிறைவுசெய்திருந்தார். ஈழத்தில் இருந்த எல்லா சிவாலயங்களுக்கும் யாத்திரை செய்திருந்தார். புங்குடுதீவில் இருந்த தமது குலதெய்வமான ஆதிவைரவருக்கு ஆலயமமைத்து விழா எடுத்தார். தனது மனைவியின் குலதெய்வம் கோவிலான தல்லையப்பற்று முருகன் கோவிலின் வருடாந்த மகோற்சவத்தின் பூங்காவனத்திருவிழாவின் உபயகாராய் இருந்து சிறப்பாக செயற்படுத்தினார். இவர் இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்று தனது பிள்ளைகளின் குடும்பத்தோடு மகிழ்ந்திருந்தார்.

காலன் அவன் விளையாட்டில் அவர் மட்டும் என்ன விதிவிலக்கா? இறுதியாக கனடா சென்றிருந்தவேளை அழகான அந்தப் பொழுதில் உடம்பிற்குள்ளே ஏதோ செய்திதென்று சொன்னவரை அவசர அழைப்புக்கு அழைத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம். கொள்ளையில போன கொரோனா காலமதில் அவருடன் நாம் ஆஸ்பத்திரிக்கு போகவும் வழியுமில்லை என்ன நடந்ததென்று எவருக்கும் தெரியாது. மூன்று கிழமைகள் மருத்துவமனையில் இருந்தார் அம்மாவும் நேராத கோயில் இல்லை கும்பிடாத தெய்வமில்லை ஆம் வைத்தியரிடம் இருந்து ஒரு அழைப்பு அப்பாவின் உடல் முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டதென்று கூறிடவே சந்தோஷத்தில் நாமிருக்க

மறுநாளே அவர் தலைவிதியை மாற்றி அமைத்துவிட வருடங்கள் பல வாழ்வேன் என் பிள்ளைகளை கரைசேர்ப்பேன் என்று நினைத்திருக்க வைத்தியரும் கை விரிக்க பொல்லாக் காலனவன் பாசக்கயிற்றிற்கு கட்டுண்டு சர்வாரி ஆண்டு வைகாசித்திங்கள் பதினேழாம் திகதி (30–05–2020) வளர்பிறை நவமித்திதியில் ஆடல்வல்லானின் குஞ்சிதபாதத்தில் நித்திய முத்திரையானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிச் சோறு நிதந்தின்று–பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி–மனம்
வாடித் துன்பமிக உழன்று–பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து– நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி   கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும்– பல
வேடிக்கை மனிதரைப் போலே–நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?
–மகாகவி சுப்பிரமணிய பாரதி –

எம் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!   ஓம் சாந்தி!!   ஓம் சாந்தி!!!

## அப்பாச்சி......

ஒரு காலப்பிரவாகத்தின்
ஓயா இழையோடும்
நீள்மௌனத்தின் மென்னதிர்வு.

உன் கண்களின் ஊடாக நான் இந்த
உலகின் உன்னதமான வெளிகளைத்
தரிசித்திருக்கிறேன்.

உன் மொழியின் வழி வலிமிகு ரணம்
நிறை மனதினை ஆற்றுப்படுத்திருக்கிறேன்.

உன் வாழ்வியல் சுவடுகள் தோறும்
உயிர்களின் உன்னத நேசிப்பும்
நிறைவிருந்தோம்பின் பூரிப்பும்
அதீத அன்பின் ஆர்பரிப்பும்
ஆழவிரியும் காலமேருவாய் வியாபிக்கும்.

முந்நீர் புனலின்று தெறித்த நுரையின்
புரையுரு வாழ்வின் சிறுதுகள் பருதின்
காலப்பின்னங்களின் பின்னல்களாய்
பின்னிச்செல்லும் காலத்தச்சனின்
அற்புதக்கண்ணி. அப்பாச்சி......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பை இழந்தவன் கைபோல

நான் பிறந்த நாள் முதலாய் என்னைக் காத்தாயே
நான் இன்று தவிக்கின்றேன் அப்பா நீ எங்கே?
கண்ணின் மணியாக என்னை வளர்த்தாய் நீ
நோயேதும் அணுகாது அனுதினமும் காத்தாயே

காலையில் எனை எழுப்பிப் கடைக்கு நீ அனுப்பி வைப்பாய்
இரவு நான் வீடுவரும் வரையும் எனக்காகக் காத்திருந்தாய்
எனைக் கண்ட பின்னே உணவு ஊட்டிவிட்டு நீ மகிழ்ந்தாய்
என் படிப்பை நீ கேட்டு கல்விக்கு உயிர் கொடுத்தாய்
எப்போதும் என் நினைவாய் கடைசியில் என்னோடு இருந்தாயே
எவ்வாறு நீ போனாய் என்னைத் தவிக்கவிட்டு
தினம் தினம் தேடுகின்றேன் காணாமல் ஏங்குகின்றேன்

ஆனாலும் திடம் கொண்டேன் என்னோடு நீ இருப்பாய் என்று
உன்னை நான் அணைத்த நேரங்கள் ஏராளம்
எல்லாம் என் மனத்திரையில் மறையாமல் நிற்குதப்பா.
உன் அறிவுரைகள் அத்தனையும் என்னோடு இருக்குமப்பா.
உன் கனவுகளை நனவாக்கி நல்வாழ்வு வாழ்வேனப்பா.

தாயுமானவனே தெய்வம் நீயின்றி வேறுண்டோ,
உன் ஆன்மா வானத்தில் மகிழ்ச்சியோடு
அமைதிகொள்ள உனக்காக
ஆண்டவனை எப்போதும் வேண்டுகிறேன்

துஷீபன் மகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணம் எனும் முத்து

அன்பும் பண்பும் நிறைந்த
மாபெரும் மனிதன் " என் அப்பா"

உன் அன்பினிலே நான் இறைவனைக் கண்டேன்
உன் பண்பினிலே நான் மனிதனைக் கண்டேன்
உன் கொடையிலே நான் மனிதத்தை கண்டேன்

உன் உள்ளம் போல் இவ்வுலகில் யார் உளர்?
என்னைக் கேட்டால் "இல்லை" என்பேன்
உனக்கு நிகர் யார் உளர்? "நீயே" என்பேன்

என்னுடன், என்கூடவே நீ வருவாய்
என் கருவில் "ஒரு உயிராய்"
நீ பிறப்பாய் "அப்பா"

"என்றும் உன் நினைவுகளுடன் நான்
தவழ்வேன் இனிவரும் காலங்களில்"

சிந்துஷா மகள்

நம்ம மறுக்கிறது எம்மனம்

கனிவான இன்முகமும் கரம் கோர்க்கும் உன் செயலும் – நிலையற்று போனதென்று தேதி கேட்டு நிலைகுலைந்து போனதன்றோ எம் மனம்கனவாலும் நினைத்திராத காரியத்தை காலனவன் நிகழ்த்திவிட்டான்என எண்ணும் பொழுது நம்ப மறுக்கிறது எம் மனம் அளவான பேச்சாலும் அளவற்ற அன்பாலும் அரவணைக்கும் எம் உடன் பிறப்பே தாயன்பு கொண்டு நேசித்த நீ எமை தவிக்கவிட்டு சென்றதேனோ – நீ தொலைதூரம் சென்றிருந்தாலும் எம் இதயத் தொடர்பில் வாழ்கின்றாய் நிலையாக! இருந்தாலும் நம்ப மறுக்கிறது எம்மனம் கண்ணீருடன் உன்பிரிவை எண்ணி தவிக்கின்றோம்.

பாசமுடன் அக்கா, தம்பி மைத்துனர் மற்றும் மைத்துனிமார் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

தாயாய் தந்தையாய் பாசமிகு மாமனாய்
நீங்கள் எமக்கு இருந்தீர் அன்புநிறை மாமாவே
உமைப்போல யாருமில்லை இவ்பூவுலகில்
துன்பங்கள் அகற்றி எமக்கு உற்ற துணையாய்
இருந்தீர்கள் இப்போ எமை விட்டு எங்கு சென்றீர்கள்
ஏங்குகின்றோம் நாம் இங்கு இனி மாமா
என்று சொல்லி அழைக்க நாதியில்லை எமக்கு
உங்கள் பிரிவினை ஏற்க முடியாமல்
கண்ணீர் விட்டுக் கலங்கி நிற்கின்றோம்.

## உற்றார், உறவினர் புலம்பல்

அன்பான பேச்சும் அழகான சிரிப்பும் பண்பான
குணமும் கள்ளமில்லா எண்ணமும் என்றும்
நெஞ்சத்தால் எமை அணைப்பவரே
நெஞ்சுருகி நிற்கின்றோம் உன்பிரிவால்
ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்டதேனோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகப் பாடல்

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தை போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசமுலாவிய கண்களும் எங்கே
பாய்ந்து துலாவிய கைகளும் எங்கே
தேசம் அளாவிய கால்களும் எங்கே
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியை போல் ஒரு மாமருந்தில்லை

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதி ஒன்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்

பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர் கதையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரிய கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திட கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க
பூதங்கள் ஐந்திலும் உன்னுடல் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க

போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது
வல்லவன் வகுத்ததடா கர்ணா...
வருவதை எதிர்கொள்ளடா
உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது
வல்லவன் வகுத்ததடா கர்ணா...
வருவதை எதிர்கொள்ளடா

தாய்க்கு நீ மகனில்லை தம்பிக்கு அண்ணனில்லை
தாய்க்கு நீ மகனில்லை தம்பிக்கு அண்ணனில்லை
ஊர்ப்பழி ஏற்றாயடா நானும் உன் பழி கொண்டேனடா
நானும் உன் பழி கொண்டேனடா
உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது
வல்லவன் வகுத்ததடா கர்ணா...
வருவதை எதிர்கொள்ளடா

மன்னவர் பணியேற்கும் கண்ணனும்
பணி செய்ய உன்னடி பணிவானடா
கர்ணா... மன்னித்து அருள்வாயடா
கர்ணா... மன்னித்து அருள்வாயடா

செஞ்சோற்று கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து
வஞ்சத்தில் வீழ்ந்தாயடா
கர்ணா... வஞ்சகன் கண்ணனடா
கர்ணா... வஞ்சகன் கண்ணனடா

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது
வல்லவன் வகுத்ததடா கர்ணா...
வருவதை எதிர்கொள்ளடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு
உதவிகள் புரிந்தவர்களுக்கும் உற்றார்,
உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்கட்கும்
இறுதிக்கிரியை, இறுதியாத்திரை முதலியவற்றில்
கலந்து கொண்டவர்களிற்கும் மலர்வளையம்
வைத்தவர்க்கும் கண்ணீர் அஞ்சலிப் பத்திரிகை
வைத்தவர்க்கும் தொலைபேசியில் ஆறுதல்
வார்த்தைகள் சொன்னவர்கட்கும் சமுக
வலைத்தளங்களில் இரங்கல் வார்த்தைகளைப்
பதிவேற்றியவர்களிற்கும் ஆத்மா சாந்திப்
பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும்
பங்கு கொண்டவர்களிற்கும் மற்றும்
பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளை
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நன்றி மறப்பது நன்றன்று


இங்ஙனம்
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலவிருட்சம்





இக்குறியீடு அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0 PDF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org